# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2076/43 - 2018 ජූනි මස 23 වැනි සෙනසුරාදා - 2018.06.23

*2076/43 ஆம் இலக்கம் – 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) என்னும் பிரிவின் கீழ் மாந்தை மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

மாந்தை மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டுவிலகியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ், மாந்தை மேற்கு பிரதேச சபையின் 04 ஆம் இலக்க விடத்தல்தீவு வட்டாரத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட அப்துல் ஹமீது சனூஸ் என்பவர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான மாந்தை மேற்கு பிரதேச சபையின் 04 ஆம் இலக்க விடத்தல்தீவு வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக சவேரியான் பேடினற் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது மாந்தை மேற்கு பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சமரசிங்க அப்புஹாமிலாகே தர்ஸ பிரவீண ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு சவேரியான் பேடினற் என்பவர் மாந்தை மேற்கு பிரதேச சபையின் 04 ஆம் இலக்க விடத்தல்தீவு வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எஸ். ஏ. தர்ஸ பிரவீண,
தெரிவத்தாட்சி அலுவலர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
மன்னார்,
2018, யூன் 21.

07-257